2017 மார்ச் 23]

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களிடம் நான் ஏற்கெனவே சொன்னேன். இப்போதுதான் நிதி கிடைத்திருக்கிறது. கடந்த வாரம்தான் மத்திய மின்துறை அமைச்சர் அவர்களைச் சந்திக்கின்றபோது, அதற்குண்டான நிதியைக் கொடுத்திருக்கின்றார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரியாதது இல்லை. இனிமேல்தான்* tender process. *முக்கியமான பகுதியாக இருக்கின்ற கொளத்தூர் பகுதி, இந்தப் பக்கம் மயிலாப்பூரை அடுத்திருக்கின்ற திருவான்மியூர் பகுதி என எல்லாப் பகுதிகளுக்கும் முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டிருக்கின்றார்கள். ஆக, அந்த அடிப்படையிலே கூடிய விரைவில் அடுத்த மழைக் காலத்திற்கு முன்பாக முடிப்பதற்குண்டான முயற்சியை மின்சார வாரியம், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

4. தகவல் கோரல்

(அ) கழுமரம், திருக்கோவிலூர் தொகுதி, தீவிரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட இராணுவ வீரர் திரு. கே. சங்கர் வாரிசுதாரருக்கு வீடு மற்றும் வேலை வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் க. பொன்முடி, என்னவென்று சொல்லுங்கள்.*

பிற்பகல் 12–50

முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 11–3–2017 அன்று இராணுவத்திலே பணியாற்றிக் கொண்டிருந்த 12 பேர் தீவிரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்டதில் திருக்கோவிலூர் தொகுதி, கழுமரம் கிராமத்தைச் சார்ந்த 36 வயதேயான தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த கே. சங்கர் என்பவரும் ஒருவர். அவருடைய குடும்பத்தில், அவருடைய மறைவிற்குப் பிறகு, அவருடைய துணைவியார் 30 வயதானவர், 3 வயதில் ஒரு குழந்தையும், 7 மாதத்தில் ஒரு குழந்தையும் இருக்கிறார்கள். நானும், இங்குள்ள என் மாவட்டத்தைச் சேர்ந்த மாண்புமிகு அமைச்சர் அவர்களும், அங்கு நடைபெற்ற அஞ்சலியில் கலந்துகொண்டோம். அந்தக் குடும்பம் மிகவும்*

[முனைவர் க. பொன்முடி] [2017 மார்ச் 23

ஏழ்மையான குடும்பம், கூரை வீட்டில் வசிக்கிறார்கள். எனவே, அவருடைய குடும்பத்திற்கு தாழ்த்தப்பட்டோர் வீட்டுவசதி வழங்கும் திட்டத்தின் மூலமாக ஒரு வீடும், பி.எஸ்சி., பி.எட்., படித்திருக்கிற மனைவி எழிலரசிக்கு உடனடியாக அரசு வேலைவாய்ப்பும் வழங்க முதல்வர் அவர்கள், இந்த அரசு முன்வருமா என்று கேட்டு, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டீஸ்கர் மாநிலம், சுக்மா மாவட்டத்தில் நக்சல் தீவிரவாதிகள் நிகழ்த்திய தாக்குதலில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த, தமிழ்நாட்டைச் சேர்ந்த விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூர் வட்டம், கழுமரம் கிராமத்தைச் சேர்ந்த, திரு. கதிர்வேல் என்பவரது மகன், மத்திய ரிசர்வ் காவல் படை CRPF துணை ராணுவ வீரரான, திரு. கே. சங்கர் என்பவர் 11–3–2017 அன்று வீரமரணம் அடைந்தார். இந்தத் துயரச் சம்பவத்தில் உயிரிழந்த துணை ராணுவ வீரர் திரு. கே. சங்கர் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்திற்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் நான் 12–3–2017 அன்று தெரிவித்துக்கொண்டதுடன், உடனடியாக திரு. கே. சங்கர் அவர்கள் குடும்பத்திற்கு ரூ.20 இலட்சம் வழங்க உத்தரவிட்டேன். அன்றையதினமே, மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் மற்றும் விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோர் 20 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை அன்னாரது மனைவி திருமதி எழிலரசி அவர்களிடம் வழங்கினார்கள். பணியின்போது உயிர்நீத்த அல்லது உடல் ஊனமடைந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த ராணுவ வீரர்களின் வாரிசுகளுக்கும் மற்றும் தீவிரவாதிகள், எதிரிகளுக்கு எதிரான நடவடிக்கையின்போது கொல்லப்பட்ட அல்லது ஊனமடைந்த எல்லைப் பாதுகாப்புப் படை, BSF வீரர்களின் வாரிசுகளுக்கும் தமிழக அரசால் கருணை அடிப்படையில் வேலைவாய்ப்பு வழங்கப்படுகிறது. அதைப்போலவே, தீவிரவாதிகள் மற்றும் எதிரிகளுக்கு எதிரான நடவடிக்கையின்போது கொல்லப்பட்ட அல்லது ஊனமடைந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த மத்திய ரிசர்வ் காவல் படை, CRPF உள்ளிட்ட மற்ற துணை ராணுவப் படை வீரர்களின் வாரிசுகளுக்கும் கருணை அடிப்படையில் பணி

2017 மார்ச் 23] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

நியமனம் வழங்குவது குறித்து, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் பயணித்து வரும் இந்த அரசின் பரிசீலனையில் ஏற்கெனவே உள்ளது. இதன் அடிப்படையில், மாண்புமிகு உறுப்பினர் முனைவர் க. பொன்முடி அவர்கள் குறிப்பிட்ட திரு. கே. சங்கர் அவர்களின் வாரிசுதாரருக்குக் கருணை அடிப்படையில் அரசுப் பணி வழங்குவது குறித்து பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட, தீவிரவாதத் தாக்குதலில் பலியான இராணுவ வீரரின் வீடு குடிசையாகத்தான் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் அங்கு வந்திருந்தார்; அப்போது மாவட்ட ஆட்சித் தலைவரும் இருந்தார். மாண்புமிகு உறுப்பினர் கோரிக்கையை வைத்தார். இறந்த இராணுவ வீரரின் குடும்பத்தாராலும் இந்தக் கோரிக்கை வைக்கப்பட்டது. பசுமை வீடுகள் திட்டத்தின்கீழ் அவருடைய குடும்பத்திற்கு உடனடியாக வீடு வழங்குவதற்கு மாவட்ட ஆட்சியருக்கு அப்போதே உத்தரவிடப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

(ஆ) பழனி தொகுதி, மர்ம காய்ச்சலால் பாதிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார் அவர்கள்.*

***திரு. ஐ.பி. செந்தில்குமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 6–3–2017, திங்கட்கிழமையன்று பழனி நகரம், கதவு எண் 175, 4–வது வார்டுக்குட்பட்ட பெரியப்பா நகர் பகுதியைச் சேர்ந்த சுமார் 46 வயது மதிக்கத்தக்க சுமதி என்கிற பெண்மணி . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. செந்தில்குமார், சுருக்கமாகக் கேளுங்கள். தற்போது மணி 12–54 ஆகிவிட்டது. சுருக்கமாகச் சொல்லுங்கள். என்னால் நிகழ்ச்சி நிரலிற்குள் செல்ல முடியவில்லை.*